# ‘தி.மு.கழகத்தின் இடிமுழக்கம்’ இரகுமான்கான் நூல்கள் வெளியீட்டு விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!



**சென்னை, ஆக. 23 -**

**சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், கழகத்தின் ‘இடி’ - ‘மின்னல்’ - ‘மழை’ என்று புகழப்பட்டவர்களில் இடியாக முழங்கிய மறைந்த இரகுமான்கான் அவர்கள் எழுதிய 5 நூல்களையும், அவருடைய சட்டமன்றப் பேருரைகளின் தொகுப்பை ‘இடிமுழக்கம்’ என்ற தலைப்பிலும், முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``இரகுமான் கான் மாமாவின் இந்நூல்கள் கழக உடன்பிறப்புகள் மட்டுமின்றி, தமிழ் மக்கள் அனைவரின் கரங்களிலும் இருக்கவேண்டிய வரலாற்றுக் கருவூலங்கள்” என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரையின் விவரம் வருமாறு:

திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். அரங்கில் உள்ள அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கழகத்தின் மூத்த முன்னோடிகள், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மிகுந்த பெருமை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடிமுழக்கமாக திகழ்ந்த மதிப்பிற்குரிய இரகுமான்கான் மாமா அவர்களின் 5 நூல்கள் மற்றும் அவரது சட்டமன்ற உரைத் தொகுப்புகள் வெளியீட்டு விழாவில், வரவேற்புரை ஆற்றுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

நேற்றைய தினம் இரகுமான்கான் மாமா அவர்களின் 5-வது நினைவு நாள். இன்றைக்கு அவரின் 6 நூல்கள் நம் தலைவர் அவர்களால் வெளியிடப்பட இருக்கின்றன. மிகுந்த சிரத்தை எடுத்து, மிகச்சரியான நேரத்தில் இந்த நூல்களைக் கொண்டு வந்துள்ள கழகத்தின் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் சகோதரர் சுபேர்கான் அவர்களுக்கும், அவரின் சகோதரர் ரியாஸ் அவர்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் கழகம் 13 ஆண்டுகள் எதிர்கட்சியாக இருந்தநேரத்தில் ஆளுங்கட்சியை, சட்டசபையில் கேள்விகளாலும், தன் சிறப்பான வாதங்களாலும் அதிரச் செய்தவர்கள் மூன்று பேர். அதில் ஒருவர் இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிற நம் இரகுமான்கான் ஐயா அவர்கள். மற்றொருவர் நம் கழகத்தின் பொதுச் செயலாளர் துரை முருகன் மாமா அவர்கள், அடுத்தது ஐயா க.சுப்பு அவர்கள். இவர்களைத்தான் நம் தலைவர் அவர்களும், உடன்பிறப்புகளும் `கழகத்தின் இடி, மின்னல், மழை’ என்று கழகத்தினர்கள் புகழ்ந்துகொண்டு இருந்தனர். அந்த வகையில், நம் இன எதிரிகள் மீது தன்னுடைய பேச்சாற்றலால் இடியாக இறங்கியவர்தான் இரகுமான்கான் மாமா அவர்கள்.

### நியாயங்களின் பயணம்

இரகுமான்கான் மாமா அவர்கள் கலைஞர் அவர்களின் மனம் கவர்ந்த பேச்சாளராக மட்டுமின்றி, எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். கலைஞர் அவர்கள் மீது அவர், அளவற்ற அன்பைக் கொண்டிருந்தவர். நம் தலைவர் அவர்கள் மீதும் மிகுந்த நம்பிக்கையும், அன்பும் கொண்டிருந்தார். `முரசொலி’யில் அவர் எழுதிய கட்டுரைகள் `நியாயங்களின் பயணம்’ என்ற தலைப்பில், இங்கே தலைவர் அவர்கள் வெளியிட இருக்கிறார்கள்.

இந்த கட்டுரைத் தொகுப்புக்கான பணிகளை இரகுமான்கான் மாமா அவர்கள் முடித்து விட்டார். ஆனால், அந்த நூலை அவர் அப்போது வெளியிடவில்லை. காரணம், நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் அமரட்டும். அப்போதுதான் நான் வெளியிடுவேன் என்று உறுதியோடு இருந்தார். இதை நம் தலைவர் அவர்கள் தன்னுடைய முன்னுரையிலும் குறிப்பிட்டுள்ளார். இரகுமான்கான் மாமா அவர்கள் விரும்பியது போல இன்றைக்கு முதலமைச்சராகவே வந்து அவரின் நூல்களை நம் தலைவர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். இதுதான் திராவிட இயக்கம். இதுதான் கழகத் தொண்டர்களுக்கும், கழகத்துக்கும் உள்ள பாசப் பிணைப்பு.

### குடும்ப விழா

இந்த உணர்வுதான் இந்த இயக்கத்தை இன்றைக்கும் உயிரோட்டமாக வைத்திருக்கிறது. அதே பாச உணர்வோடுதான் நானும் இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றி இருக்கிறேன். இது என்னுடைய குடும்ப விழா என்ற உணர்வுடன் இங்கே உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இரகுமான்கான் மாமா அவர்கள் தன் பேச்சாற்றலின் காரணமாக, அவரை நாம் `இடி’ என்றுச் சொன்னாலும், அவர் எழுதிய கவிதை நூல்களைப் படித்துப் பார்த்தால், தென்றலாகவும் இருந்திருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் புரியும்.

`நடைப்பயணம்’ என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். மனிதனின் ஐம்புலன்கள் இந்த சமூகத்திற்கு எப்படி பயன்பட வேண்டும் என்று அந்தக் கவிதை சொல்கிறது. கண்கள் சாதாரணமாகப் பார்க்கக்கூடாது, அநீதிகளைப் பார்க்க வேண்டும். கால்கள் சாதாரணமாக நடக்கக்கூடாது, நியாங்களை நோக்கி நடக்கவேண்டும். கைகள் பிறருக்கு நேசக்கரம் நீட்டவேண்டும் என்பதுதான் அந்தக் கவிதை. இப்படி எந்நாளும் சமூகத்தின் நலனுக்காக சிந்தித்து வாழ்ந்தவர்தான் மாமா இரகுமான்கான் அவர்கள்.

பெரிய கவிதைகள் மட்டுமல்ல, ஹைக்கூ கவிதைகளையும் சிறப்பாக எழுதியுள்ளார். இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலில் அடிமைகள், பாசிஸ்ட்டுகளைப் பார்த்து பயப்படுகிறார்கள். இந்த அடிமைகளுக்காக அன்றைக்கே ஒரு ஹைக்கூ கவிதையை இரகுமான்கான் மாமா அவர்கள் எழுதி இருக்கிறார்.

மன்னராக இருந்தாலும் மண்டியிடாது மண்பொம்மை. ஆனால், மண்பொம்மைகள் கூட செய்யாததை, இன்றைக்கு சில அடிமைகள் டெல்லியிடம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இரகுமான்கான் மாமா அவர்கள் `முரசொலி’யில் எழுதிய கட்டுரையின் தொகுப்பான `நியாயங்களின் பயணம்’ என்ற புத்தகம் இங்கே வெளியிடப்பட இருக்கிறது.

### நகைச்சுவையான பதில்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பொன் விழாவையொட்டி இரகுமான்கான் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்று அந்த நூலில் இடம் பெற்றுள்ளது. அதில் சட்டமன்றத்தில் கலைஞர் அவர்களின் நகைச்சுவையான பதில்களைப் பற்றி எழுதி இருக்கிறார். அதில் ஒன்றை மட்டும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1982-ஆம் ஆண்டில் திருச்செந்தூர் முருகன் கோயிலில் வேல் ஒன்று காணாமல் போய்விட்டது. அந்தக் கோயிலின் அதிகாரி ஒருவரும் அந்த சம்பவத்தில் கொல்லப்பட்டார். அதற்காக நீதிகேட்டு கலைஞர் அவர்கள் திருச்செந்தூரை நோக்கி தன் தொண்டர்களுடன் நடைப்பயணம் சென்றார். இதுப்பற்றி, சட்டப்பேரவையில் பேசிய அ.தி.மு.க உறுப்பினர் ஒருவர், ``கலைஞர் அவர்கள் திருச்செந்தூரை நோக்கி நடைப்பயணம் சென்றார். ஆனால், அங்கே உள்ள முருகன் அவரைப் பார்க்க விரும்பாமல், எம்.ஜி.ஆரின் இராமாபுரம் தோட்டத்துக்குப் போய்விட்டார் என்று கிண்டலாக பேசியிருந்தார்”.

அப்போது சபையில் இருந்த கலைஞர் அவர்கள் உடனே எழுந்து, ``இதுவரைக்கும் முருகனின் வேல் மட்டும்தான் காணவில்லை என்று நினைத்தேன். இப்போது அ.தி.மு.க உறுப்பினர் சொல்வதைப் பார்த்தால் முருகனையே காணவில்லை என்று தெரிய வருகிறது. முருகன் இருக்கும் இடத்தையும் சொல்லியிருக்கிறார். பேரவைத் தலைவர் அவர்களே முருகனை மீட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று கலைஞர் அவர்கள் அன்று சட்டப்பேரவையில் நகைச்சுவையாகப் பேசினார்.

### சுவாரஸ்யமான தகவல்

அப்போது சபாநாயகராக இருந்த ராசாராம் அவர்கள் அந்த அ.தி.மு.க உறுப்பினரைப் பார்த்து, `நீ கொஞ்சம் சும்மா இருக்க மாட்டியா?’ என்று கேட்டார். ஒட்டுமொத்த சட்டசபையுமே அன்றைக்கு சிரிப்பலையால் அதிர்ந்திருந்தது. இதுமாதிரி பல சுவாரஸ்யமான தகவல்களை, அந்த கட்டுரையில் நீங்கள் படிக்கலாம்.

இப்படி ஆறு நூல்களும், ஆறு முக்கிய வரலாற்றுக் கருவூலமாக நம்மிடம் வந்திருக்கின்றன. இந்த நூல்கள் கழக உடன்பிறப்புகள் மட்டுமின்றி, தமிழரின் அனைத்து கரங்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்த சிறப்புக்குரிய நூல்களை வெளியிட்டு, உரையாற்ற வந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை மீண்டும் வருக, வருக என்று வரவேற்று மகிழ்கிறேன்.

விழாவில், கலந்துகொண்டு சிறப்பித்து இருக்கின்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர், தகைசால் விருது பெற்ற அண்ணன் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன்.

மூத்த பத்திரிக்கையாளர் அண்ணன் நக்கீரன் கோபால் அவர்களையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஜெ.எம். ஆரூன் அவர்களையும், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் தலைவர் திருப்பூர் அல்தாப் அவர்களையும், அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களையும், சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள் அக்பர் அலி, வாசுகி அவர்களையும், முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்களையும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது ஷகி அவர்களையும், சிறுப்பான்யினர் நல ஆணையத் தலைவர் ஃபாதர் ஜோ.அருண் அவர்களையும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வந்துள்ள சிறுபான்மை நல உரிமைப் பிரிவைச் சேர்ந்த நிர்வாகிகள் அத்தனை பேரையும்,

மருத்துவர் சுபேர்கான் உள்ளிட்ட இரகுமான்கான் அவர்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்களையும், மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், இந்த நிகழ்ச்சிக்கு வந்துள்ள கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், தோழமை இயக்கத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்கிறேன். பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களையும் வரவேற்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் உங்கள் அத்தனைப்பேரையும் கழக தொண்டரில் ஒருவனாக வரவேற்று மகிழ்கிறேன்.

இரகுமான்கான் மாமா அவர்களின் இந்த நூல்கள் வெளியீட்டு விழாவில், மீண்டும் கழக ஆட்சி அமைத்திட, நாம் அத்தனைப்பேரும் உறுதியேற்போம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

---

### தமிழ்நாட்டின் சரக்கு ரெயில் வழித்தடங்களுக்கான

# மூலதனச் செலவு, மிகக் குறைந்த அளவில் ஒதுக்கப்படுவது ஏன்?

## மக்களவையில் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 23 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 20.8.2025 அன்று மக்களவையில், நாடாளுமன்ற விதி எண். 377ன் கீழ், தமிழ்நாட்டின் ரயில் சரக்கு வழித்தடங்களுக்கான, மூலதன செலவு, மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, ஒரு சதவீதம் மட்டுமே, மிக, மிக குறைந்த அளவில் ஒதுக்கீடு செய்யப்படுவது, ஒன்றிய அரசின் மாற்றான் தாய் மனப்பான்மையை காட்டுகிறது என்றும், அதற்கு உரிய விளக்கத்தை ஒன்றிய அரசினால் அளிக்க இயலுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்திய அரசின் மொத்த உற்பத்தி பெருக்கத்தில் 9 சதவீதம் அளவிற்கு தமிழ்நாடு அரசின் பங்களிப்பு உள்ளது என்றும், பெரிய அளவில் நெடுஞ்சாலைகள் கட்டமைப்புகளையும், இரண்டாவது பெரிய கடற்கரை நீளத்தையும் இந்தியாவிலுள்ள 13 பெரிய துறை முகங்களில் 3 பெரிய துறை முகங்களையும், தமிழ்நாட்டில் இருந்த போதிலும், ரயில்வே கட்டமைப்புகளில் ஒன்றிய அரசின் ரயில் சரக்கு வழித்டதங்களுக்கான, மூலதன செலவுகள், தமிழ்நாட்டிற்கான பங்களிப்பு மட்டும் ஏன் ஒரு சதவீதமாக மட்டுமே உள்ளது? என்றும், சென்னை. எண்ணூர், தூத்துக்குடி, மற்றும் கடலூர் துறைமுகங்களை சென்னையுடன் இணைக்கும் ரயில் சரக்கு வழித்தடங்களை நிறுவ ஏன் போதிய நிதி ஒதுக்கீடு செய்வதை ஒன்றிய அரசு மேற்கொள்ளவில்லை என்றும்; மேலும், ரயில் பயண நேரத்தை 50 சதவீதமாக குறைக்கும் வகையிலும் கன்னியாகுமரி, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களை, வேலூர், விழுப்புரம், கும்மிடிப்பூண்டி போன்ற சிறிய நகரங்களின் இணைக்கும் அதிவேக ரயில் பயண வழித்தடங்களை ஏற்படுத்த எந்த திட்டங்களையும் தமிழ்நாட்டில் 2014 ஆண்டிலிருந்து மேற்கொள்ளாதது ஏன் என்றும், 500 இலட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் என்ற இந்திய பொருளாதார இலக்கை அடைய தமிழ் நாடு மட்டும் 100 இலட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் பங்களிப்பினை தர தயாராக உள்ள மாநிலம் என்பதை ஒன்றிய அரசு உணரவில்லையா? என்றும் ரயில்வே கட்டமைப்புகளை தமிழ்நாட்டில் அதிகப்படுத்த ஒன்றிய அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா என்று டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வியை எழுப்பினார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதி வடக்கு ஒன்றியம் மேலத்தாணியத்தில் 5 ஊராட்சி கழக கிளைச் செயலாளர்களை தனித்தனியாக சந்தித்து இயற்கை வளங்கள் துறை அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி கள ஆய்வு நடத்தினார். உடன் திருமயம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துக்ளகுமார் உள்ளார்.

---

### வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில்

# கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் — டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 22 -

வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பணிகள் குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பங்கின் விவரங்கள் தருக? மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் NRLM இன் கீழ் இளைஞர்களின் வேலை வாய்ப்பு நிலை மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளைமேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்று அவர் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் அமைச்சர் கம்லேஷ் பாஸ்வான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

ஒன்றிய அரசு கொடை திட்டங்களில் தீனதயாள் அந்த்யோதயா யோஜனா தேசிய கிராமப்புற வாழ்வாதார மிஷன் (DAY-NRLM) திட்டத்தின் கீழ், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் பின்வரும் இரண்டு மத்திய நிதியுதவி திட்டங்களை செயல்படுத்துகிறது, அதாவது தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY) & கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) ஆகியவை கிராமப்புற ஏழை இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, அவர்களின் லாபகரமான வேலைவாய்ப் புக்காக, தமிழ்நாடு உட்பட நாட்டில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் செயல்படுத்தப்படுகின்றன.

திட்டங்கள் பற்றிய சுருக்கம் பின்வருமாறு:

i. தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY): DDU-GKY என்பது 15-35 வயதுக்குட்பட்ட கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் இணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்ட மாகும். இது கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன்களை வழங்கி, வழக்கமான தொழி லாளர் வேலை வாய்ப்பு சந்தைகளில் அவர்கள் பங்கேற்பதை எளிதாக்குகிறது, இதனால் அவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தில் அல்லது அதற்கு மேல் வழக்கமான மாத ஊதியம் கொண்ட வேலைகளை வழங்குகிறது. DDU-GKY வழிகாட்டுதலின் படி

SC/ST (50%), பெண்கள் (33%) மற்றும் PwDs (5%) ஆகியோரை சமூக ரீதியாக உள்ளடக்குகிறது.

ii. கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs): RSETI என்பது வங்கி தலைமையிலான கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் (MoRD) நிதியுதவியுடன் கூடிய பயிற்சி நிறுவனமாகும், இது அவர்களின் மாவட்டங்களில் ஸ்பான்சரிங் வங்கிகளால் நிறுவப் பட்டது, இது திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான பயிற்சியை வழங்குகிறது.

RSETI கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு MoRD நிதி உதவி வழங்குகிறது மற்றும் ‘கிராமப்புற ஏழை’ பயனாளர் பயிற்சி அளிப்பதற்கான செலவையும் ஏற்கிறது.

சுயதொழில் அல்லது தினக் கூலி வேலைவாய்ப்பை மேற்கொள்ளும் திறன் கொண்ட 18-50 வயதுடைய எந்தவொரு வேலையற்ற இளைஞரும் RSETI இல் பயிற்சி பெறலாம். பயிற்சி பெற்ற சில பயனர்கள் வழக்கமான சம்பள வேலைகள் / கூலி வேலைவாய்ப்பையும் நாடலாம்.

தமிழ்நாட்டின் வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் 2014-15 நிதியாண்டு முதல் 2025-26 வரை ஜீன் 2025 வரை NRLM இன் கீழ் DDU-GKY & RSETI திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்ற/இடமளிக்கப்பட்ட/ குடியேற்றப்பட்ட இளைஞர்களின் விவரங்கள் பின்வருமாறு: -

வேலூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1446 பேர் சேர்க்கப்பட்டு 814 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 9998 பேர் சேர்க்கப்பட்டு 6772 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. திருப்பத்தூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1387 பேர் சேர்க்கப்பட்டு 908 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2943 பேர் சேர்க்கப்பட்டு 2193 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1283 பேர் சேர்க்கப்பட்டு 755 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2891 பேர் சேர்க்கப்பட்டு 2054 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.